# விடைக்குறிப்புகள்
# காலாண்டுப் பொதுத்தேர்வு (மேல்நிலை இரண்டாமாண்டு)
# பொதுத்தமிழ்

காலஅளவு : 3.00 மணி நேரம் மதிப்பெண்கள் : 90

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14 x 1 = 14

1. இ) தொல்காப்பியம்
2. ஆ) மணல் அள்ளுதல்
3. ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. ஈ) 2,3,4,1
5. ஆ) திருமணமும் குடும்பமும்
6. ஆ) உத்தம சோழன்
7. இ) இசைக்கருவி
8. இ) கடுக்காய்
9. ஈ) கூற்று சரி, காரணம் சரி
10. இ) முரண்பண்பு
11. ஆ) வினைப் படிமம்
12. ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
13. ஆ) சிந்தாமணி
14. இ) பரலி சு. நெல்லையப்பர்

## பகுதி - II
### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 x 2 = 6

(இரண்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம் )

15. எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் :
    - கலைத்தொழில் வல்ல புலவர்கள் இந்த உலகில் எந்தத் திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு தவறாமல் கிடைக்கும்.

16. கலி விழா, ஒலிவிழா :

கலி விழா - எழுச்சி மிக்க விழா
எழுச்சி மிக்க விழாக்கள் நிறைந்த வீதிகளை உடைய ஊர் திருமயிலை

ஒலி விழா - ஆரவார விழா
மயிலை கபாலீச்சரம் கோவிலில் பங்குனி உத்திரம் ஆரவாரமாகக் கொண்டாடப்படும்

17. கவிஞர் சிற்பி வியந்து பாடத்தமிழின் துணை வேண்டுவன :
    - கதிரவன் மறைதல்
    - சிவந்த வானம் பூக்காடாய்க் காட்சியளித்தல்
    - உழைப்பாளர்களின் துன்பம் அடைந்த சிவந்த கரங்கள்
    - பருத்த தோள்களில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாய் இருத்தல்
    - இவற்றை வியந்து பாட உன்னை விட்டால் வேறு துணையுண்டோ என்கிறார்.

www.Padasalai.Net

18. மறக்கக்கூடாது ,மறக்கக்கூடியது

- மறக்கக்கூடாது - ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று.
- மறக்கக்கூடியது - பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 2 x 2 = 4

19. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்.

- காலின் மெக்கன்சியின் தொகுப்புகளைக் கொண்டு 1869 இல் உருவாக்கப்பட்ட நூலகம்.
- ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகள் காணப்படுகிறது.

20. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள்

- தமிழில் - நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன்
- கணிதம் - கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பல வகை வாய்பாடுகள்.

21. பசுமைக் குடில் வாயுக்கள்-

- கார்பன்-டை-ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவைகளைப் பசுமைக்குடில் வாயுக்கள் ஆகும்

(இரண்டு கருத்துக்கள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்).

## பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 7 x 2 = 14

22. உவமைத் தொடரைத் சொற்றொடரில் அமைத்து எழுதுதல்.

அ) எனது ஆசிரியர் நடத்திய பாடம் எனக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகப் புரிந்தது.

( அல்லது )

ஆ) தலைவன் இல்லாத குடும்பம் அச்சாணி இல்லாத தேர் போல இருக்கும்.

23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) வியந்து = விய + த் (ந்) + த் + உ

வியபகுதி

த் - சந்தி

ந் - விகாரம்

த் - இறந்த கால இடைநிலை

உ -வினையெச்ச விகுதி

ஆ) பேசுவார் = பேசு+ வ்+ ஆர்

பேசு- பகுதி

வ்- எதிர்கால இடைநிலை

ஆர் -பலர் பால் வினைமுற்று விகுதி

www.Padasalai.Net

24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

அ) அருங்கானம் = அருமை + கானம்

விதி 1 : ஈறுபோதல்

விதி 2 : இனமிகல்

ஆ) எத்திசை = எ + திசை

விதி : இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்.

25. கலைச்சொல்லாக்கம் தருக.

அ) Platform - நடைமேடை

ஆ) Visa - நுழைவு இசைவு

26. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

கலை, களை, கழை

**கழை**க்கூத்தாடிகள் ஆடி ஆடிக் **களை**த்துப் போனாலும் அவர்களுக்கு அந்தக் **கலை**யில் ஆர்வம் மிகுதியாகவே உள்ளது.

27. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடராக்குக.

காலை**யில்** எழுந்து படித்**தால்** நமக்கு நன்மை ஏற்படும்.

28. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

நம் மாநிலம் இந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்டது.

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல்.

இப்பொழுது எனக்குப் புரிந்து விட்டது. நீயும் புரிந்துகொள்.

30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

அ) தாமரை : தா + மரை

- குளத்தில் தாமரை அழகாக இருக்கும்.
- கானகத்தில் தாவுகின்ற மான் காணப்படும்.

ஆ) தலைமை : தலை + மை

- எனது பள்ளித் **தலை**மையாசிரியர் சிறந்த நிர்வாகத் திறமை மிக்கவர்.
- இக்காலத்தில் பெரும்பாலான இளைஞர்கள் **தலையில் மை** பூசுகின்றனர்.

( பொருத்தமான கருத்து எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 4 = 8

( நான்கு கருத்துக்கள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்

31. வாடைக்காலத்தில் கோவலர்களின் நிலை:

- கோவலர்கள் தங்கி இருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது.
- தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த வளைந்த கோலை உடைய ஆயர், எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளைவேறு மேடான நிலத்தில் மேய விட்டனர்.
- தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- குளிரின் மிகுதியால் ஆயர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது.
- பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் ஆயர்களது பற்கள் நடுங்கின.
- மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது குளிர்கால நள்ளிரவு.

32. ராமன் ஆற்றிய கடமை:

- கரிய அகில் கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும், தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான்.
- பூக்களைக் கொண்டு வந்து, மணலினால் மேடையை அமைத்து, நன்னீரையும் எடுத்து வந்தான்.
- தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் இராமன் தூக்கிக்கொண்டு அடுக்கப்பட்ட விறகுகளின் மீது வைத்தான்.
- இராமன், தந்தையின் நண்பனான கழுகு வேந்தனைத் தந்தையாகவே கருதி மகன் நிலையில் அவனுக்குரிய இறுதி சடங்குகளைச் செய்கிறான்.

33. நெல்லின் நேரே வெண்கல் உப்பு:

- பண்டைய காலத்தில் ஒரு பொருளுக்குப் பதிலாக மற்றொரு பொருளைப் பெற்றுக்கொள்ளும் பண்டமாற்று வணிக முறையே நிலவியது.
- இப்பண்டமாற்று வணிகத்தை அகநானூற்றுப் பாடலில் அம்மூவனார் விளக்குகிறார்.
- "நெல்லின் நேர வெண்கல் உப்பு எனச் சேரி விலைமாறு கூறலின்..." (அகம் 140)
- உமணர் ஒருவரின் மகள், "உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக்கொள்ள வாரீரோ!" என்று தெருவில் கூவுவதாகக் கூறும் இப்பாடல், பண்டமாற்று வணிகத்தைக் கண்முன் காட்சிப்படுத்துகிறது.

34. ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்:

- இடம் : தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்
- பொருள் : கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தின் இருளை அகற்றும் சூரியன்.
- விளக்கம் : சூரியன் உலகத்தின் புற இருளைப் போக்குகிறது. தமிழ், மக்களின் அகத்தில் உள்ள அறியாமை இருளைப் போக்குகிறது.

(குறிப்பு- இடம்-1 மதிப்பெண், பொருள் -1மதிப்பெண், விளக்கம்-2 மதிப்பெண்)

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2 x 4 = 8**

35. பேரிடர் மேலாண்மை ஆணையம்:

- நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை வாரியத்தை அமைத்தது.
- புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துக்கள் முதலானவை பேரிடர்கள்.
- பேரிடர் நிகழும் போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த வாரியம் உதவுகிறது.

- மாநிலம், மாவட்டம், ஊராட்சி , சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்து பேரிடர்க் காலங்களில் இவ்வாரியம் செயல்பட வழிவகை செய்துள்ளது .

36. நீங்கள் ஆசிரியரானால்:

- நான் ஆசிரியரானால் மாணவர்களைப் பெயர் சொல்லி அழைப்பதை விட தம்பி, தங்கை என்று அழைப்பேன்.
- இதன் மூலம் ஆசிரியர், மாணவர் இடைவெளியைக் குறைத்து நெருக்கத்தை அதிகரிப்பேன்.
- பாடங்களைக் கற்பிப்பதோடு வாழ்க்கை பாடங்களையும் இணைத்துக் கற்பிப்பேன்.
- மாணவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொள்ளும் வகையில் அன்பாகவும், கனிவாகவும் அறிவுரைகள் வழங்கி நெறிப்படுத்துவேன்.

(பொருத்தமான வேறு விடைகள் எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.)

37. இன்றைய கூட்டுக்குடும்பம் பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே:

- சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவு பெற்றது. இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தை உடன்வாழும் விரிந்த குடும்ப முறை.
- ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் (பாடல் - 279) கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தையும் சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையைப் பாடுகிறது.
- மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயன் என்னும் விரிந்த குடும்பச் செய்தியைத் தொல்காப்பியம் பதிவு செய்கிறது.
- அதன் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாக இருக்கிறது.
- "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே "என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்து இருக்கிறாள்.

38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்கள்:

- இந்திய சாரசனிக் கட்டடக்கலைப்பாணி யில் கட்டப்பட்ட எழும்பூர் தொடர்வண்டி நிலையம்.
- தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை அறிய உதவும் தமிழ்நாடு ஆவணக் காப்பகம்.
- தென்னிந்திய வரலாற்றை அறிய உதவும் எழும்பூர் அருங்காட்சியகம்.
- இந்தியாவின் முதல் பொது நூலகமான கன்னிமாரா நூலகம்
- தென்னிந்திய திரைப்படத்துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய கோடம்பாக்கம் ஆகியவை சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக இன்றும் நிலைத்திருக்கின்றன.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 x 4 = 12

39. அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

இக்குறட்பாவில் பயின்று வரும் அணி நிரல் நிறை அணியாகும்.

அணி இலக்கணம் :

www.Padasalai.Net

சொல்லையும் பொருளையும் வரிசை முறையாக நிரல் நிறத்திப் பொருள் கொள்வது நிரல்நிறை அணியாகும்

அணி பொருத்தம் :

முதலடியில் அன்பு, அறன் என்ற சொல்லை வைத்த வள்ளுவர் அதன் பயனான பண்பையும் பயனையும் அதற்கடுத்த அடியில் வரிசையாக நிரல் நிறுத்திப் பொருள் கொள்வதால் நிரல்நிறையணியாயிற்று.

அன்பு - பண்பு

அறன் - பயன்

(அல்லது)

ஆ) ஏகதேச உருவக அணி :

அணி இலக்கணம் :

செய்யுளில் ஒரு பொருளை உருவகம் செய்துவிட்டு அதற்கு இணையான மற்றொரு பொருளை உருவகம் செய்யாது விட்டுவிடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

சான்று:

சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

அணி பொருத்தம்:

சினத்தை நெருப்பாகவும் இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார். இது ஏகதேச உருவக அணியாகும்.

40. இலக்கிய நயம் பாராட்டுக.

- மையக்கருத்து

(ஏற்புடைய நயங்கள் எவையேனும் மூன்று)

- தொடை நயம்
- சொல்நயம்
- அணிநயம்
- சந்த நயம்
- சுவை நயம்

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

- பழமொழி விளக்கம்
- வாழ்க்கை நிகழ்வு( கதை)
- பழமொழி உணர்த்தும் நீதி

(பொருத்தமான விடை எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

42. அ. பாடாண் திணை:

ஒருவருடைய புகழ், வலிமை,கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

www.Padasalai.Net

சான்று:

"வாயிலோயே! வாயிலோயே!

வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தி" எனத் தொடங்கும் ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடல்.

திணைப் பொருத்தம்:

இப்பாடலில், "நெடுமான் அஞ்சி தன் அறியலன் கொல்?" என்ற கூற்று அதியமானின் கொடைத்திறத்தைப் புலப்படுத்துகிறது. எனவே, பாடாண் திணைக்குச் சான்றாயிற்று.

(அல்லது)

ஆ. கூதிர்ப் பாசறைத் துறை :

துறை விளக்கம்:

போர்மேற் சென்ற அரசன், குளிர் காலத்தில் தங்கும் படைவீடு பற்றிக் கூறுவது கூதிர்ப் பாசறைத் துறையாகும்.

சான்று:

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்

பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென

எனத் தொடங்கும் நக்கீரர் பாடிய நெடுநல்வாடை பாடல்.

துறை பொருத்தம்:

188 அடிகளைக் கொண்ட இப்பாடல், பாண்டியன் நெடுஞ்செழியன் போரின் போது அமைத்த படைவீடு பற்றிக் கூறுகிறது.

எனவே, கூதிர்ப் பாசறைத் துறைக்குச் சான்றாயிற்று.

43. தமிழாக்கம் தருக

1. புதிய மொழியைக் கற்பது என்பது புதிய வாழ்வைத் தொடங்குவது.
2. என் மொழியின் எல்லைகள்தான் என் உலகத்தின் எல்லைகள்.
3. மக்கள் உன்னைப் புரிந்து கொள்ள விரும்பினால், அவர்கள் மொழியில் நீ பேசு.
4. மொழிகள் பற்றிய அறிவு ஞானத்தின் வாயில்.

43. ஆ). காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.

1. மொழி என்பது மக்கள் படைத்து காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது.
2. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பது ஆகும்.
3. மனம் என்பது பெரும்பாலும் மொழியாக வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும்.
4. மொழியை வளர்ப்பவரும் மக்களே. மொழியால் வளர்ப்பவரும் மக்களே.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

# பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 x 6 = 18

(ஆறு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கவும்)

44. அ. செய்ந்நன்றி அறிதல்:

- திருக்குறள் - குறிப்புகள்.
- செய்யாமல் செய்த உதவி, விண்ணையும் மண்ணையும் விட உயர்ந்தது.
- உரிய காலத்தில் செய்த உதவி, இந்த உலகத்தை விடப் பெரியது.
- பயன் எதிர்பாராமல் செய்த உதவி, கடலை விடப் பெரியது.
- ஒருவர் தினையளவு உதவியைச் செய்திருந்தாலும் அதன் பயனை அறிந்தவர் பனையளவாக மதித்து போற்றுவர். பிறர் செய்த தீமையை உடனே மறந்து விட வேண்டும்; நன்மையை ஒருபோதும் மறக்கக்கூடாது.
- எந்த அறத்தை அழித்தவர்க்கும் அப்பாவத்திலிருந்து மீண்டு வர வழியுண்டு; ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு அப்பாவத்திலிருந்து மீள வழியே இல்லை. இவ்வாறு " செய்ந்நன்றி அறிதலே அறம் " எனத் திருக்குறள் கூறுகிறது.

(அல்லது)

ஆ. சென்னையில் உள்ள மயிலாப்பூர் கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் காட்சிப்படுத்தப்பட்டவை :

- ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும், சமய ஒருமைப் பாட்டையும் ஒளி வழிபாட்டையும் முன்வைத்து சீர்திருத்தச் சிந்தனை உருவான இடம் சென்னையின் கந்தக்கோட்டம்.
- அறம் செய்பவர்கள் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தக்கோட்டத்து திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே!
- உள்ளொன்றும் புறமொன்றும் பேசும் உறவு என்னை பற்றாதவாறு காக்க வேண்டும்.
- சிறந்த வாழ்வியல் நெறிகளை எனக்கு அருள் புரிய வேண்டும்.
- மதமான பேய் அணுகாது இருக்க வேண்டும்.
- பெண்ணாசையை துறக்க வேண்டும்.
- உன்னை மறவாதிருக்க வேண்டும்.

(பொருத்தமான கருத்து எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

45 அ. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள்:

- தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்கு சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்.
- உண்மையையும், உணர்வையும், அறிவுப்புலனையும் அழகியல் இலக்கியமாக ஆக்குகிறது.
- மொழி சார்ந்த கலை என்பது இலக்கியம் ஆகும். மொழியின் தனித்துவமான பண்புகள் இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத் தன்மையைத் தந்து விடுகிறது. இதை 'கவித்தனம்' அல்லது 'இலக்கியத்தனம்' என்பர்.
- மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமை மிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்திற்காக தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

- கவிதையின் இயங்காற்றல் தான் நடை.
- இசையோடும் இசைக்கருவியோடும் தான் மொழி சார்ந்த கவிதை பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்வதை ஒலிப்பின்னல் என்கிறோம்.
- வன்மையான உணர்ச்சியைக் காட்ட வல்லின மெய்கள் அதிகமாக வருகின்றன. பாடல்களில் நெடில் ஒலிகளின் வருகை, சில ஒலிகளும், சில சொற்களும் திரும்ப வரல் தன்மை, சொல் விளையாட்டுகள் போன்ற ஒலிக்கோலம் சங்கப் பாடல்களில் முக்கியமான பண்பாகும்.
- சொல்வளம் என்பது என்பது தனிச் சொற்களாய் நிறைந்து அமைவதைக் குறிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.
- சொல்பவனுடைய மொழித்திறனைக் கேட்போர் பெற வேண்டும். பரிமாறப்படும் உணர்வுகளுக்கும், செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் நேர் நடத்தும் ஏறி இறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்கும்.

(அல்லது)

ஆ. பண்டைய காலக்கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகள்:

வித்யாரம்பம் அல்லது கல்வி தொடக்கம்:

- முதன்முதலில் ஐந்தாம் வயதில் வித்யாப்பியாசம் செய்யும் பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாக கொடுத்தனர்.

முறை வைப்பு:

- உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்பு' என்று கூறுவார்கள்.

எழுத்துப் பயிற்சி:

- பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள்.
- உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் எழுதுவார்கள்.

எழுத்தாணிகள்:

- வாரெழுத்தாணி,
- மடக்கெழுத்தாணி,
- குண்டெழுத்தாணி

மனனப் பயிற்சி:

- தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று.

  சாந்துணையும் கற்றல்:
- பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டவர் பயின்று வந்தனர்.
- " என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு" எனத் திருக்குறள் கூறுகிறது. (பொருத்தமான கருத்துக்கள் எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

46. அ. கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன.....( இதன் தொடர்ச்சியைச் சொந்த நடையில் கற்பனையாக எழுதியிருந்தால் மதிப்பெண் வழுங்கவும். தொடக்கம், முடிவு, கதையின் போக்கு, வளர்ச்சி ஆகியவை கவனிக்கப்பட வேண்டியவை).

(அல்லது).

ஆ. பாரதியின் கடிதம் வாயிலாக அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று

மொழிப்பற்று.

- தமிழை வளர்ப்பதையே எப்போதும் கடமையாகக் கொள்ள வேண்டும்.
- தமிழில் புதியன புகுதல் வேண்டும்.
- உண்மை இன்பம் அதிகமாக வேண்டும்.
- தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தோன்ற வேண்டும்.
- பிற மொழியில் உள்ள இசை, சிற்பம், பூமி நூல்கள், வான நூல்கள் என அனைத்துத் துறை சார்ந்த நூல்களும் தமிழில் பெருக வேண்டும்.

சமூகப்பற்று

- நம்மை விட மெலியவருக்கு நாம் இரக்கப்பட்டு அவர்களை நமக்கு இணையானவராக ஆக்க வேண்டும்.
- அனைத்துத் துறையிலும் உயர வேண்டும். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்று கொள்ள வேண்டும்.
- பெண்ணைத் தாழ்த்துபவர்கள் தன் கண்ணைத் தானே குத்திக் கொண்டதற்குச் சமம்.
- தமிழ்நாட்டில் தொழில்கள் பெருக வேண்டும்.

## பகுதி - V

**அடி பிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** 4 + 2 = 6

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.

அ. தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
 உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
 உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
 பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
 பிடியா திருக்க வேண்டும்.

- இராமலிங்க அடிகள்

ஆ. திருக்குறள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

www.Padasalai.Net